# EASTERN UNIVERSITY, SRI LANKA

## Part I Examination in Business Administration / Commerce

## 2002 / 2003 (Repeat)

## BBA / COM 202 Advanced Financial Accounting I

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது.

நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

1. 31.12.2002 இல் உள்ளவாறான X கம்பனியினதும் Y கம்பனியினதும் ஐந்தொகைகள் பின்வருமாறு

| | X கம்பனி | Y கம்பனி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 வானவை) | 210000 | 150000 |
| 9% முன்னுரிமை பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 வானவை) | 90000 | ------- |
| 8% தொகுதிக் கடன்கள் | 60000 | 90000 |
| இலாப நட்டக் கணக்கு | 120000 | 75000 |
| கடன்கொடுத்தோர் | 120000 | 135000 |
| | **600000** | **450000** |
| காணி கட்டடம் | 230000 | 200000 |
| தளபாடமும் பொருத்திகளும் | 100000 | 70000 |
| இருப்புக்கள் | 90000 | 50000 |
| கடன்பட்டோர் | 110000 | 90000 |
| காசும் வங்கியும | 70000 | 40000 |
| | **600000** | **450000** |

1.1.2003 இல் X கம்பனியானது Y கம்பனியை பின்வரும் நிபந்தனைகளின் கீழ் வாங்கு செய்தது.

1. Y கம்பனியின் தொகுதிக்கடன்காரருக்கு X கம்பனியின் ஒவ்வொன்றும் ரூபா. 10 பெறுமதியான 7500 9% முன்னுரிமை பங்குகளை பங்கு ஒன்று ரூபா.12 விலையில் வழங்குதல்.

2. Y கம்பனியின் சாதாரண பங்குதாரருக்கு பங்கு ஒன்றிக்கு X கம்பனியின் ஒவ்வொன்றும் ரூபா. 10 வான ஒரு சாதாரண பங்கினை பங்கு ஒன்று ரூபா. 15/- விலையில் வழங்குதலும் ஒரு ரூபா காசினை வழங்குதலும்.

3. Y கம்பனியின் சொத்துக்களும் ( காசு மற்றும் வங்கி மீதியைத் தவிர) பொறுப்புக்களும் பின்வரும் பெறுமதியில் X கம்பனியால் கையேற்கப்பட்டன.

| | ரூபா |
|---|---|
| காணி கட்டடம் | 250000 |
| தளபாடம் பொருத்திகள் | 60000 |
| இருப்புக்கள் | 45000 |
| கடன்பட்டோர் | 85000 (ரூ.5000 ஐயக்கடன் ஒதுக்கம்) |
| கடன்கொடுத்தோர் | 135000 |

4. கலைப்புச் செலவு ரூ.10000 Y கம்பனியால் செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது.

i. Y கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய கொள்வனவு மதிப்பனத்தினைக் கணிப்பீடு செய்க.

ii. Y கம்பனியின் கணக்கேடுகளை மூடுவதற்கான பொருத்தமான பேரேட்டு கணக்குகளைத் தயாரிக்குக.

iii. X கம்பனியின் ஏடுகளில் Y கம்பனியின் கொள்வனவு தொடர்பான நாட்குறிப்பு பதிவுகளை எழுதுக.

25 புள்ளிகள்

Jun 20
Eastern University, S

2. கொழும்பு தலைமை அலுவலகத்தினதும் மும்பாயில் (இந்தியா) அமைந்துள்ள அதன் கிளையினதும் கணக்கேடுகளிலிருந்து 31.12.2002 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதிகள் பின்வருமாறு :

| விடயங்கள் | தலைமை அலுவலகம் | | கிளை | |
|---|---|---|---|---|
| | வரவு (ரூ.000) | செலவு (ரூ.000) | வரவு (இந்தியரூ.000) | செலவு (இந்தியரூ.000) |
| முலதனம் | | 2500 | | |
| இலாப நட்டக் கணக்கு 1.1.2002 இல் | | 807 | | |
| காணி கட்டடம் | 300 | | | |
| நன்மதிப்பு | 150 | | | |
| பொறியும் இயந்திரமும் | 2400 | | 1800 | |
| தளபாடமும் பொருத்திகளும் | 90 | | 120 | |
| 1.1.2002 இல் இருப்பு | 1020 | | 840 | |
| கொள்வனவுகள் | 6336 | | 3600 | |
| தலைமை அலுவலகத்திலிருந்து பெற்ற பொருட்கள் | | | 1200 | |
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் | | 3000 | | |
| விற்பனைகள் | | 6320 | | 6240 |
| கூலியும் சம்பளங்களும் | 248 | | 120 | |
| வாடகையும் வரியும் | 36 | | 30 | |
| காப்புறுதி | 20 | | 15 | |
| வியாபார செலவுகள் | 54 | | 30 | |
| தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கு | | | | 1710 |
| கிளை நடைமுறைக் கணக்கு | 4275 | | | |
| கடன் பட்டோர் | 660 | | 360 | |
| கடன் கொடுத்தோர் | | 3338 | | 255 |
| காசும் வங்கியும் | 376 | | 90 | |
| | 15965 | 15965 | 8205 | 8205 |

மேலதிக தகவல்கள்:

1. 31.12.2002ல் இருப்புக்கள்: தலைமை அலுவலகம் - ரூபா. 876000

கிளை - இந்திய ரூபா.780000

2. கிளையினதும் தலைமையலுவலகத்தினதும் பொறி இயந்திரத்திற்கு அதன் புத்தகப் பெறுமதியில் 10% பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

3. நாணய மாற்று விகிதங்கள் பின்வருமாறு :

   i. பொறியும் இயந்திரமும் தளபாடங்களும் பொருத்திகளும் கொள்வனவு செய்த போது :

      ஓர் இந்திய ரூபா = ரூபா. 1.50

   ii. 1.1.2002 இல்: ஓர் இந்திய ரூபா = ரூபா. 2.00

   iii. 31.12.2002 இல்: ஓர் இந்திய ரூபா = ரூபா . 3.00

   iv. ஆண்டுக்கான சராசரி விகிதம் : ஓர் இந்திய ரூபா = ரூபா. 2.50

வேண்டப்படுவது :

1. மும்பாய்க் கிளையின் பரீட்சை மீதிகளை இலங்கை ரூபா நாணய அலகிற்கு மாற்றுக.

2. தலைமை அலுவலகம், கிளை மற்றும் முழு வியாபாரம் ஆகியவற்றுக்கான பின்வருவனவற்றை நிரல் முறையில் தயாரிக்குக.

   i. 31.12.2002 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு.

   ii. 31.12.2002 இல் உள்ளவாறான ஐந்தொகை.

   iii. தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கு மற்றும் கிளை நடைமுறைக் கணக்கு.

3. AVS ட்ரவல்ஸ் கம்பனியானது TATA மோட்டர்ஸ் கம்பனியிடமிருந்து வாடகைக் கொள்வனவு முறையின் கீழ் பஸ் ஒன்றை 1.1.2000 இல் கொள்வனவு செய்தது. வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் படி ரூபா. 47800 உடன் காசாகையும் 31.12.2000 இலிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ரூபா. 92610 வருடாந்த தவணைக் கட்டணத்தை மூன்று ஆண்டுகளுக்கு செலுத்துதல்வேண்டும். வாடகைக் கொள்வனவு வட்டி விதம் ஆண்டுக்கு 5% ஆகும். இவ்வட்டி வருடாந்த தவணைக் கட்டணத்தில் உள்ளடங்கியுள்ளது.

வேண்டப்படுவது :

1. வாடகைக் கொள்வனவு மொத்த வட்டியையும் வருடாந்த வட்டியையும் கணிக்க.

2. பஸ்ஸின் காசு விலையைக் கணிக்க.

3. பஸ்ஸின் வாடகைக் கொள்வனவு விலையைக் கணிக்க.

4. 2000, 2001, 2002 ஆண்டுகளுக்கு வாடகை கொள்வனவாளரின் ஏட்டில் பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக.

i. பஸ் கணக்கு.

ii. TATA மோட்டர்ஸ் கம்பனிக் கணக்கு.

iii. வாடகை கொள்வனவு வட்டிக்கணக்கு.

LIBRARY
21 JUL 20
Eastern University, S

25 புள்ளிகள்.

4. A கம்பனியினதும் அதன் உப கம்பனியாகிய B கம்பனியினதும் 31.12.2002 இல் உள்ளவாறான ஐந்தொகைகள் பின்வருமாறு :

| பொறுப்புக்கள் | A கம்பனி | B கம்பனி |
|---|---|---|
| பங்கு மூலதனம்(பங்கு ஒன்று ரூ.10) | 1000000 | 400000 |
| பொது ஒதுக்கம் | 100000 | 20000 |
| இலாப நட்டக் கணக்கு | 150000 | 60000 |
| கடன் கொடுத்தோர் | 150000 | 60000 |
| | **1400000** | **540000** |
| சொத்துக்கள் | | |
| இறையில் ஆதனம் (கிரயத்தில்) | 200000 | 100000 |
| பொறி இயந்திரம் | 250000 | 100000 |
| B கம்பனியின் பங்குகளின் முதலீடு | 400000 | -------- |
| இருப்புக்கள் | 150000 | 200000 |
| கடன்பட்டோர் | 200000 | 20000 |
| வங்கி மீதி | 200000 | 120000 |
| | **1400000** | **540000** |

மேலதிக தகவல்கள் :

i. 01.01.2002 இல் A கம்பனியானது B கம்பனியின் 30000 சாதாரண பங்குகளை கொள்வனவு செய்தது. அத் திகதியில் B கம்பனியின் பொது ஒதுக்கக் கணக்கில் ரூ.20000 வும் இலாபநட்டக் கணக்கில் ரூ.40000 செலவு மீதியும் காணப்பட்டன.

ii. B கம்பனியின் கடன்பட்டோர் A கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா. 5000 வை உள்ளடக்கியுள்ளது.

iii. A கம்பனியின் இருப்புக்கள் B கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 25000 பெறுமதியான பொருட்களையும் உள்ளடக்கியுள்ளது. அவ்விலை B கம்பனியினால் கிரயத்துடன் 25% கூட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது :

31.12.2002 இல் உள்ளவாறான திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்குக.

25 புள்ளிகள்.